பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவா ஆண்டு 2031 வைகாசி 13 வெள்ளிக்கிழமை ( 26 - 05 - 2000 ) VALAMPURI ஒலி: 158

## ★ யாழ். குடாநாட்டின் யுத்தநிலை
# அன்ரன்பாலசிங்கத்துடன் நோர்வே பிரதிநிதி பேச்சு!

### இலங்கை, இந்திய நிலைப்பாடுகள் குறித்து விளக்கப்பட்டன

(கொழும்பு)

**யாழ். குடா நாட்டில் யுத்தம் உக்கிரமடைந்து வரும் வேளையில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே பிரதிநிதி எரிக் சோல்கேம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்று இலண்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.**

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாகசமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் றேயன்ட் ஜொகான்சன் ஜனாதிபதிசந்திரிகுமார துங்காவுடனும் எதிர்க்கட்சித்தலைவர் ரணிலுடனும் பேச்சு நடாத்தியது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து இலங்கைக்கான விடயத்தைக் கையாளும் நோர்வேப் பிரதிநிதி எரிக் சோல்கேம் இந்திய வெளியுறவுச் செயலர் லலித் மான் சிங்குடன் பேச்சுக்களை நடாத்தியபின் இலண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்துடன் நேற்று இரு

[4ஆம் பக்கம் பார்க்க]

### நோயாளர் புறப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை கப்பலில் செல்வதற்காக மூன்றுநோயாளர்கள் மதகுரு ஒருவர் உட்பட 10 பேர்யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து வாகன மூலம் நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் இக்கப்பல்கொழும்பிலிருந்து திரும்பிவரும்பொழுது வைத்திய ஊழியர் உட்பட 10பேர் அழைத்து வரப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது

(ச-வ)

### ஊரடங்கு நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9 00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு (சங்கானை) வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவு [தெல்லிப்பழை] வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு (சண்டிலிப்பாய்) வலி.தெற்கு பிரதேச செயலர்பிரிவு [உடுவில்) வலி கிழக்குபிரதேச செயலர் பிரிவு (கோப்பாய்) ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இன்று அதிகாலை 5மணி தொடக்கம்பகல் 1.30 மணிவரை ஊரடங்குச்சட்டம் அமுலிலிருக்கும்.

இவை தவிர்ந்த யாழ்குடாநாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம்மீண்டும் இரவு 7 மணிக்கு அமுல்ப்படுத்தப்படும் என்றுயாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம்அறிவித்துள்ளது.

## இலங்கைத் தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும்!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இலங்கைத் தமிழருக்கு ஜனநாயக உரிமைகளையும், மனித அடிப்படை உரிமைகளையும் வழங்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுள் ஒருவரான த.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனி ஈழக் கோரிக்கை ஏற்க முடியாதெனவும் இலங்கை அரசின் நியாமான கோரிக்கையை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார். (வ-க)

### கூட்டுநடவடிக்கைத் தளபதி
## தளுவத்த தளபதிகள் சகிதம் யுத்தமுனையில் ஜெனரல் ரத்வத்த

(கொழும்பு)

யாழ் குடாநாட்டு யுத்த நிலை தொடர்பாக ஆராய்வதற்கென கொழும்பிலிருந்து உயர்மட்ட இராணுவதளபதிகள் பலாலி இராணுவ முகாமுக்கு வந்துள்ளனர்.

கூட்டு நடவடிக்கைத் தளபதி றொகான் தளுவத்த, பிரதிப் பாதுகாப்புஅமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த மற்றும் முப்படைத் தளபதிகளுமே நேற்று பலாலித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலை மோதல்: 7 படையினர் பலி 5 அதிகாரிகள் உட்பட 41 பேர்காயம்!

(கொழும்பு)

சரசாலை மேற்குப்பகுதியில் படையினரின்முன்னணிக் காவல் நிலைகளை நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் தாக்கினர் என்றும் அதனைப் படையினர் முறியடித்து விட்டதாகவும் விசேட தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன்

(4ஆ பக்கம் பார்க்க]

### மட்டக்களப்பில் ஷெல்லுக்கு 6பேர்பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் இரு சிறுவர்கள் உட்பட 6 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இரு சிறுவர்கள் உட்பட 5 பொது மக்கள் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச)

### நோர்வே தூதரக குண்டு வெடிப்பு விசாரணைகள் துரித கதியில்

(கொழும்பு)

கொழும்பில் நோர்வே தூதரகம் முன் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக புலன் விசாரணைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமானோர் பல்வேறு கோணங்களிலும் துருவித்துருவி விசாரிக்கப் பட்டுவருவதாகவும் எவரும் இதுவரையில் கைது செய்யப் படவில்லை என்றும் தெரிவிக் கப்படுகிறது.

### அச்சுவேலியில் எதிர்பாராத மோதல்!

(கொழும்பு)

அச்சுவேலியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் 4 பேர் பலியானதாகவும் இடையில் அகப்பட்ட பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இம்மோதலின்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகள் கப்பல் இன்று வரும்?

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு ''திருமலை நகரம்'' என்ற

( 4ஆம் பக்கம் பார்க்க)

### 4 லொறிகளில் மா எடுத்து வரப்பட்டது!

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து நேற்று நான்கு லொறிகளில் கோதுமை மா எடுத்து வரப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் ஒரு லொறி மாவையும் சுன்னாகம், பண்டத்தரிப்பு, உடுப்பிட்டி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் தலா ஒரு லொறி மாவினையும் எடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### வவுனியாவில்கிளைமோர் வெடித்து இரு புளொட் உறுப்பினர்கள் பலி

(வவுனியா)

வவுனியா கொறவப்பொத்தானை முள்ளிப்பிள்ளையார் வீதியில் கடை ஒன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் வெடித்ததில் இரு புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம் இக்கிளைமோர் வெடிக்கவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வின்சன் என்று அழைக்கப்படும் கரவெட்டியைச்சேர்ந்த கந்தப்பு ஜெயராஜ் (வயது 39) என்பவரும் வண்ணை என்பவருமே கொல்லப்பட்டவர்களாவர். (வ-ச)

## யாழ். கல்விவலயம் IIல் 90வீத பாடசாலைகள் இயங்குகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் யுத்த சூழ்நிலையின்போதும், பகல்நேர ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாததனால் யாழ் கல்வி வலயம் இரண்டில் உள்ள 132 பாடசாலைகளில் பெரும்பாலானவற்றில் தொண்ணூறு வீதமான மாணவர்கள் வரவுடன்பாடசாலைகள்இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி வலயம் இரண்டில் மொத்தமாக உள்ள 132 பாடசாலைகளில் 35 பாடசாலைகளில் சுமார் 5348

(4ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வை. சிவசுப்பிரமணியம் என்பவரது540233381Vஇலக்கம்உடைய தேசிய அடையாள அட்டை மல்லாகத்திற்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன்கோவிலுக்கும் இடையில் கடந்த 16ம் திகதி தவறிவிட்டது. கண்டுஎடுத்தவர்கள்வலிவடக்கு பிரதேசசபை மல்லாகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(471)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறு குழுப்பாக ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்கசுவாமிகள் வீதி (பிளாக்வீதி) சங்கானை

(475)

### ஆங்கிலக் கல்வி

ஆண்டு 6 முதல் 11 வரை விட்டுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும்50/33 செட்டித்தெரு நல்லூர்

(480)

### புலமைப் பரிசில் வகுப்பு

தரம் 5 இற்கு விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரால் தனியாகவோ சிறுகுழுவாகவோ கற்பிக்கப்படும். தொடர்பு: அம்பாள் நமசிவாயம் சில்லாலை

(481)

## இடம் மாற்றம்

### நடனமுருகன் வைத்திய நிலையம்

யாழ்.சத்திரச்சந்தி நடன முருகன் வைத்தியநிலையம் தற்காலிகமாக நவாலி றோட் ஆனைக் கோட்டைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(473)

## அறிவித்தல்

இல:95ஸ்ரான்லி வீதியில் உள்ள v.k.இராசரத்தினம் ஸ்தாபனத்தில் TV.றேடியோக்கள் திருத்துவதற்காக ஒப்படைத்தவர்கள் தயவு செய்து அவற்றை கீழ்க் காணும் விலாசத்தில் மீளப் பெற்றுக்கொள்ளவும்.

த.ஸ்ரீவிமலேஸ்வரன்
முருகமூர்த்திகோவில் வீதி
நவாலிகிழக்கு
மானிப்பாய்

(479)

## இடமாற்றமும் நிர்வாகசபைக் கூட்டமும்

வடமாகாணதெங்குபனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் அலுவலகம், தற்காலிகமாக இயங்கி வரும் வலிகாமம் பனை தென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி தலைமை அலுவலகத் தில் எ திர்வரும் 27-05-2000 சனிக்கிழமைமு.ப.10.30 மணிக்கு சமாசத்தின் நிர்வாகசபைக் கூட்டம் ந டை பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

செயலாளர்
சமாசம்

(470)

சாவகச்சேரியில்

## ஷெல் தாக்குதலில் காயமடைந்த ஒரு சிலரின் விபரங்கள்

(புலோலி)

சாவகச்சேரியில் அண்மையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விபரம் வருமாறு:

சுப்பிரமணியம் ராசகுமார் (வயது 37) சாவகச்சேரி விக்கினேஸ்வரா களஞ்சிய உரிமையாளர், பா. ஜெயசோதி (கச்சாய் வீதி சாவகச்சேரி), எஸ். பிரியகாந்தி (வயது 07) மீசாலை, ஆகியோர் வைத்தியசாலையில் சிகிச்சைபெறுகின்றனர்.

மற்றும் எஸ். உமையம்மா (வயது 40) மீசாலை கிழக்கு கே. இராசம்மா (வயது 65) மீசாலை ஆகியோர் சிகிச்சையின் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-52

## இடம்மாற்றம்

### சிவலிங்கம் வைத்தியசாலை

4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலை தற்காலிகமாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் முன் ஒழுங்கையில்இடம்மாற்றப்பட்டுஇயங்கிவருகின்றது.

Dr. ஸ்ரீ ஜீவகன்

[கி-347]

## இடம் மாற்றம்

இல 304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்

### அம்பிகை களஞ்சியம்

தற்பொழுது வன்னியசிங்கம் வீதி, தாவடியிலுள்ள

### S.R மில்லில்

(இணுவில் துரை வீதி, அண்ணா கோப்பி ஸ்தாபனத்திற்கு அருகாமையில்) இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்பிகை களஞ்சியம்

(வி. இல:- 485)

ஓம் சக்தி

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

# உயர்திருவிழா அறிவித்தல் -2000

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் [02-06-2000] வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் அம்பாளின் மகோற்சவம் ஆரம்பமாகும்.

02-06-2000 — வெள்ளி பகல் 12.00 மணி கொடியேற்றம்
08-06-2000 — வியாழன் இரவு — கைலைக் காட்சி
10-06-2000 — சனி பகல் எழுந்தருளி அம்பாளுக்கு [108] சங்காபிஷேகம்
11-06-2000 — ஞாயிறு பகல் புதிய மஞ்சம் வெள்ளோட்டம்.
இரவு 6.00 மணி மஞ்சத்திருவிழா.
12-06-2000 — திங்கள் பகல் வாயுபட்சணி நாகம் வீதியுலா,
இரவு 6.00 மணி பூந்தண்டிகை
14-06-2000 — புதன் பகல் கைலைக் காட்சி, இரவு 6.00 மணி சப்பறம்
15-06-2000 — வியாழன் பகல் 10.00 மணி தேர்
16-06-2000 — வெள்ளி காலை 7.00மணிக்கு தீர்த்தம், இரவு திருவூஞ்சல் கொடியிறக்கம்.
17-06-2000 — சனி இரவு 7.00 மணி தெப்பத்திருவிழா

25-05-2000

அறங்காவலர் சபையினர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

**குறிப்பு:**

(1) அம்பாளின் பெயரால் ஏமாற்றுப் பேர்வழிகள் எவரிடமும் எப்பொருளையும் வழங்க வேண்டாம்.

(2) உயர் திருவிழாவிற்காக தற்காலிகக் கடைகள் அமைப்பதற்காக ஏலவிற்பனை ஆலயவீதியில் எதிர் வரும் சனிக்கிழமை (27 - 05 - 2000) காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

(க483)

## யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை

### பட்டதாரிப்பிரிவு

பல மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க வெளிவாரிப் பட்டப்படிப்புக்கானபின் வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆரம்பம்: 27-05-2000 காலை 9-00 [S.L.T]
G.A.Q — யாழ்ப்பாணம், G.A.Q — பேராதனை
B.A Part I, B.A Part II, Jaffna, B.A Final Peradeniya, First in Commerce — JAFFNA.

ஆகிய கற்கை நெறிகளுக்கு விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

தமிழ் — பொ. அருந்தவநாதன்
பொருளியல் — அ. குமாரவேல்
கிறிஸ்தவம் — எஸ். தேவராஜா
அரசியல் — அ. குமாரவேல்
வர்த்தகம் — எஸ். கருணதாஸ்
மெய்யியல் — வே. யுகபாலசிங்கம்

ஏனைய பாடங்களும் உப பாடங்களும் பிரபல விரிவுரையாளர்களினால் போதிக்கப்படும். சகல மாணவர்களுக்கும் நூல் நிலைய வசதி அளிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை.

(கி-463)

''அறத்தான் வருவதே, இன்பம் மற்றெல்லாம்'' புறத்த புகழு மில

- குறள்

# வலம்புரி

## நிஜங்கள் பிணங்களாய்

அப்பாடா! பாரதி உன் வாயிலே சர்க்கரைபோட வேண்டும் இன்று இருந்தால். ''தெய்வம்நமக்குத் துணை பாப்பா'' என்று அன்று சொன்னது இந்த அவல வேளையில் நிஜமாகி விட்டதே. வாழப் பிறந்த உயிர்ப் பிண்டங்கள் நடைப் பிணங்களாக சந்திக் குச்சந்தி, வீதிக்கு வீதி ஏம்பலித்து ஓடுகின்றனவே.

ஒருஉண்மை புலர்கிறது உயிர்வெல்லமல்ல என்ற யூலியஸ்சீசர் தோற்றுவிட்டான். இந்த ஓட்டங்களுக்கு காரணம் உயிரைப் பிடிக்கும் இலக்கு ஒன்றேயெனலாம். உயிர்வெல்லம் தான். உடமை போனாலும் உயிரைப் பாதுகாப்போம் என்ற இதய ஏக்கம் செல் வந்த நாட்டில் தெளிவாகத் தெரிகிறது.

ஏதோவினைப்பயனால் விபத்தாக வந்தநிர்வாகக் கதிரைகளில் உள்ளோர்க்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. துன்பச் சுமையால் துவண்டு போபவர்களை அணைத்துக்கொண்டுதேவையானவற்றை செம்மையாகச் செய்து கொடுத்தலாகும்.

நிழல்நிவாரண நிபுணர்கள் கிராமத்தின் சேவகர்கள்; நிர்வாகிகளின் வழி நடத்தலில் சேவை செய்பவர்கள். தங்கள் வயிற்றைத் தாராளமாக நிரப்புவது போல் ஏழைகளை ஏதிலிகளை ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இருக்கும்இடம் நாடி சேவை புரிய வேண்டும். மக்கள் விநியோகங்களில் மகத்தான வெட்டுக்கள் போடும் மகான்கள். ஏதோவெட்டிக் கிழிப்பது போல்ஒரிரு தினங்கள் ஒபீசில் தரிசனம் கொடுப்பவர்கள். பல புத்திசாலிகள் பக்க உழைப்புப் புரிபவர்கள். சாதாரண காலங்களில் அறுத்துத்தொலைக் கட்டும் மன்னிப்போம்.

இந்த காலங்களில்உள்ளத்தைத் தொடும் பணி புரியட்டும். வேகமும்விவேகமும் வேண்டும். உண்மைதான். குறுக்கு வழியில் வந்த குதம்பைச் சித்தர்களுக்கு பணிச்சுமை இருக்கும்தான்.

நீதிக்கரங்கள் அல்லாதோரைஇறுக்கிப்பிடிக்கத் தான் போகிறது. விழி பிதுங்கி வியர்ந்து வெலவெலக்கப்போகிறார்கள் குறுக்கு வழிச்சம்பாத்தியம் உப்புக் கொட்டிலில் விழுந்த ஒழுக்குப் போல கரையப்போகிறது. மண்ணின் மக்களுக்கு உரிய தொண்டு செய்ய வில்லையோ தண்டனை உங்களைக் காத்திருக்கும்.

- அன்புடன் ஆசிரியர்

# இலங்கையில் இந்திய இராணுவத்தின் தலையீட்டை நாம் ஆதரிக்கவில்லை

## ஏ. பி. பரதன் தெரிவிப்பு

[சென்னை]

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதனை தாம் ஆதரிப்பதாகவும் இந்தியாவின் இராணுவத் தலையீட்டை தான் ஆதரிக்கவில்லை என்றும் இந்திய சம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் ஏ. பி. பரதன் தெரிவித்துள்ளார்.

ஒன்று பட்ட இலங்கையின் கீழ் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்குவதை தான் ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் தமிழகத்தில் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்றும் தமிழக மக்களின் உணர்ச்சிகள் புண்படுத்தப்படும் என்றும் தற்போதைய நிலையில் இராணுவத்தலையீடு அவசியமற்றது என்றும் தெரிவித்தார் [வ. க)

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு புதியவர்களைச் சேர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு யூன் முதல் வாரத்தில் புதிய ஆசிரியமாணவர்களைச் சேர்ப்பதற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சு சகல நடவடிக்கைகளையும்மேற்கொண்டுள்ளது.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளுக்கான மாணவர் பட்டியல் தயாராக இருப்பதாகவும் அவைவிரைவில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கல்வி, உயர் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பகுதிக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் நேற்றுத் தம்மிடம் தெரிவித்ததாக யாழ். மாவட்ட பயிற்றப்படாத ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (க-4

# யாழ். வங்கிகள் சேவை நேரம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் சகல கிளைகளும் வாடிக்கையாளர்களுக்காக இன்று முதல் மறு அறிவித்தல் வரை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை திறந்திருக்கும் என்று யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கிளைகள் தவிர்ந்த ஏனைய கிளைகள் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை திறந்திருக்கும் என்றும் சாவகச்சேரி வங்கிக் கிளைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளதுடன் ஊரடங்குச் சட்ட நேரத்துக்கமைய மேற்படி நேரங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [வ-ச]

## உறுதிப்படுத்தவும்

சர்வதேச செஞ்சிலுவைக் கப்பலில் பயணம் செய்வதற்காக ஏற்கனவே 23, 26, 31ம் திகதிகளுக்கு பயண சிபாரிசு பெற்றவர்கள் யாழ். வைத்திய சாலையில் நிர்வாக அலுவலரிடம் 28, 29, 30, ம் திகதிகளில் வந்து பயணத்தை உறுதிப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது (க-12)

## சமூகமளிக்கவும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், பிரதேச செயலகத்தில்கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது கடமைக்கு சமூகமளிக்குமாறு யாழ் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (க-4)

## அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்இந்துஆரம்பபாடசாலை தரம் 5 மாணவர்களின் பெற்றோர்களையும், பாடசாலையின் சகல ஆசிரியர்களையும், இன்று வெள்ளி மு. ப.11.00 மணிக்கு தவறாது பாடசாலைக்கு வருகை தருமாறு பாடசாலை அதிபர் கோட்டுள்ளார். (க)

## யாழ். பல்கலை நிதிக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் நிதிக்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு இடம்பெற உள்ளது.

பல்கலைக்கழக சபா மண்டபத்தில் மேற்படி நிதிக்கூட்டம் இடம் பெறவுள்ளதாக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (க)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதானவீதிக்குச்சமீபமாக இயங்கி வந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த திங்கள் முதல் சுழிபுரம் வடக்கம்பிறை அம்மன் கோயிலுக்கு முன்பாக தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகின்றது என ம.உ. ஆணைக்குழுவின் தலைவர் என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார் (0-4)


# TRRO நிறுவனம்

## அறிவித்தல்

எமதுநிறுவனம் மானிப்பாய் வீதி, உரும்பிராயில் அமைந்துள்ள உபகாரியாலயத்தில் 23 - 06 - 2000 திகதியிலிருந்து இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

எதிர்வரும் 29 - 05 - 2000 திகதி காலை 11. 00 மணிக்கு எமது பயிற்சி நிலைய போதனாசிரியர்களையும் பயிலுநர்களையும் தையல் பயிற்சியைத் தொடரும் மாணவர்களையும் அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அ, நல்லதம்பி

தலைவர்.

(சி/351)

## தகவல் தரவும்

மட்டுவில் தெற்கில் வசிக்கும் சந்திரா சிவகுருநாதன் (AGAOFFICE சாவகச்சேரி) கட்டுக்காணி ஆஸ்பத்திரியடி சாவகச்சேரியைச்சேர்ந்த அவரது தாயார் யோகேஸ்வரி தங்கை சுமதி எங்கிருக்கிறார்கள் என்பதை அறியத் தருமாறும்திருநெல்வேலிக்குவருமாறும்கோருகின்றார்.

இ.பிறேமறாஜன்
இலங்கை வங்கி சுன்னாகம்
காளிகோவிலடி திருநெல்வேலி கிழக்கு

(345)

## OXFORD INSTITUTE

கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

SPOKEN ENGLISH AND GRAMMAR

BY:- BRITTO

27-05-2000 அன்று (சனி காலை 8-30) வகுப்புகள ஆரம்பமாகும். அனுமதிகளுக்கு முந்துங்கள்.

- நிர்வாகி

(477)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை

## தற்காலிக இடமாற்றம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை காரியாலயம் பிரசாத் வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய் (நவாலி சென் பீற்றர் சேச்முன்பாக) என்ற விலாசத்தில் இயங்குகின்றதென்பதை குழு உறுப்பினர், ஏனைய உறுப்பினர், தொண்டர்கள், பொது மக்கள் யாவருக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

கௌரவ செயலாளர்
இ.செ.ச.யாழ்.கிளை

(344)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## அறிவித்தல்

திரு. பா.மே. யோ.இம்மனுவேல் சங்கப் பணியாளர் உடன்(அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு அறியத்தரப்படுகிறது,

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ.சங்கம்
பண்டத்தரிப்பு

(சி/346)

## வங்கி அறிவித்தல்

நேற்றைய [25 - 05 - 2000] எமது அறிவித்தலில், யாழ் நகர வங்கிக்கிளைகள் காலை 9. 00 மணி முதல் 10. 30 மணி வரை வாடிக்கையாளருக்காகத் திறந்திருக்கும் என தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. அதனை காலை 9. 30 மணி முதல் 10. 30 வரை எனத்திருத்தி வாசிக்கவும்.

மேலும் இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக்கிளையும் யாழ்நகர வங்கிக்கிளைகள்போலவே இயங்குமென்பதை அறியத்தருகிறோம்.

தலைவர்.
யாழ், மாவட்ட வங்கியாளர் சங்கம்.

(சி 350)

## இடம் மாற்றம்

### வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்காலிகமாக கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்,

ச. புவிச்சந்திரன்
172|3, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்,

(467)

# சாவகச்சேரிப் பகுதி ஷெல் வீச்சில் ஒருவர் பலி, பன்னிரண்டுபேர் காயம்

(புலோலி)

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பன்னிரண்டுபேர் காயமடைந்துமுள்ளனர்.

காயமடைந்தவர்கள் மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளை மகாவித்தியாலய ஆசிரியரான கந்தசாமி சிவபாலன் (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார். காயமடைந்தவர்களான சோமசுந்தரம் பிரபாகரன் (வயது 15) சாவகச்சேரி, சோமசுந்தரம் யோகம்மா (வயது 52) சாவச்சேரி, கந்தசாமி சரவணமுத்து (வயது 65) சாவகச்சேரி, வைததியலிங்கம் பரிமளம் (வயது 45)சாவகச்சேரி, எஸ். நகுலேஸ்வரன் (வயது 24) கொடிகாமம், எஸ். தர்சினி (வயது 22) மட்டுவில், எஸ். ஜன்தி [வயது 40] சரசாலை எஸ். லக்ஷ்மன் [வயது 12] சரசாலை, எஸ். இராஜ்குமார் [வயது 36[ சாவகச்சேரி, நாகமுத்து சங்கரப்பிள்ளை [வயது55]சரசாலை, சங்கரப்பிள்ளை சிவசீலன் [வயது 24]சாவகச்சேரி, சிவப்பிரகாசம் ஜெயசிறி[வயது31] சரசாலை ஆகியோரே மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் ஆவர். (வ-52)

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

கேள்வி பிற்போடல்

24 - 9792 இலக்க லொறி பொடி வேலை எஞ்சின் வேலைக்கான கேள்விகள் நாட்டு சூழல் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
பண்டத்தரிப்பு.

(கி 346)

## அச்சுவேலியில்...

போது, திருமதி எஸ். மகேஸ்வரி (வயது 55) என்பவர் இடையில் அகப்பட்டு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மோதலையடுத்து அச்சுவேலிக்கடைகள்யாவும் மூடப்பட்டன. நேற்று அச்சுவேலியில் வழமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. [க-67)

## அன்ரன்...

மணித்தியாலங்கள் இனப்பிரச்சினை குறித்தும், தற்போது யாழ்.குடாவில் ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடி குறித்தும் விரிவாகப் பேச்சு நடாத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின்நிலைப்பாடு குறித்தும் இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய மாறிவரும் சூழ் நிலைகள் குறித்துஇந்தியா எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் பேசியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நோர்வே பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து, இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் புதிய திருப்பம் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர், [வ-ச]

## தளுவத்த...

தளத்திற்குவந்தவர்களாவர். இவர்கள் தென்மராட்சியில் யுத்தமுனைப் பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டதுடன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் யுத்த நிலைமைகள் தொடர்பாக படை அதிகாரிகளையும் படையினரையும் சந்திக்கனர்.

## யாழ்.கல்வி...

பேர் டம் பெயர்ந்துவந்து தங்கியுள்ளனர். சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் உள்ள ஆனைக்கோட்டை ஆர். சி. பாடசாலையில் 1010 பேரும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் 908 பேரும், உடுவில் கல்விக் கோட்டத்தில் 10 பாடசாலைகளில் 1394 பேரும், சங்கானைக் கல்விக்கோட்டத்தில், மூன்று பாடசாலைகளில் 657 பேரும், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் ஒரு பாடசாலையில் 58 பேரும் இடம் பெயர்ந்து வந்து தங்கி உள்ளனர்.

## சரசாலை...

5 அதிகாரிகள் உட்பட 41 படையினர் காயமடைந்துள்ளதாகவும் விசேட தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## பயணிகள்....

கப்பல் இன்று புறப்படும் என கடற்படையினர் நேற்று திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வேலும்மயிலும் தெரிவித்துள்ளதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது. (வ-ச)

# மரண அறிவித்தல்கள்

## இராசதுரை - சிவநாதன்

கைதடி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா - இராசதுரை (விவாக, இறப்பு, பிறப்பு, பதிவாளர் நாவற்குழி), திருமதி இராசதுரை - கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மகன் திரு. இராசதுரை - சிவநாதன் [ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - குருசாமி வித்தியாலயம்) அவர்கள் 23-05-2000 அன்று காலமானார். இவர் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவவரதன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), சிவாகரி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாசிவன் [வைத்திய கலாநிதி) அவர்களின் அன்புச் சகோதரனும், சிவசங்கர், கோபிசங்கர் (4-ம் வருட மருத்துவபீட மாணவன்), உமாசங்கர், உதயசங்கர் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், சண்முகரட்னம் [வைத்திய கலாநிதி கைதடி], சண்முகதேவன். சண்முகநாதன் (காணிப் பதிவகம் யாழ்-செயலகம்], சண்முகலிங்கம் [நல்லூர் ப. நோ. கூ. சங்கக் கணக்காளர்), காலஞ்சென்ற சுமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 05-2000 அன்று கைதடி வடக்கில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

கைதடி வடக்கு,
கைதடி.

திரு. சண்முகலிங்கம்
[மைத்துனர்]
த. கோபிசங்கர்
[பெறா மகன்]

(சி 476)

## திரு. சுப்பையா - ஐயாத்துரை

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சு. ஐயாத்துரை அவர்கள் (2000 - 05 - 25) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. சுப்பையா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி. பொன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினம், துரைராஜா, செல்வரெத்தினம், கனகரெத்தினம், தவமணிதேவி, லோகேஸ்வரன் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (2000 - 05- 26) இன்று 496, கே. கே. எஸ், வீதியில் உள்ள இல்லத்தில் காலை 9-30 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்

496, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஐ. துரைராஜா
மகன்
அதிபர்
யா/வண் நாவலர் ம. வி.

[486]

வாடிக்கையாளர்கட்கு ஓர்அன்பான

வேண்டுகோள்

ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் 103, 106இல் இயங்கிவந்த

அருள் விநாயகர்

ஸ்தாபனம் தற்பொழுது பிரதான வீதி சங்கானையில் இயங்கி வருகின்றது. என்பதை அறியத்தருகின்றோம்.

அருள் விநாயகர் ஸ்தாபனத்தார்

(சி/469)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி தவராசா

[முன்னைநாள் கிராமசேவை உத்யோகத்தர்]
நீர் வேலி வடக்கு.

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பிதவராசா

17-5-2000 அன்று புதன்கிழமை காலமானார் அன்னார்இளையதம்பிஆச்சிக்குட்டியின் அன்புமகனுமாவார்இவர் உமாதேவியின் அன்புக்கணவரும், கிருசாவின் அன்புத் தந்தையும், நாராயணர்கந்தையா, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் கிருஷ்ணகுமாரின் அன்பு மாமனாரும், டிரோசாவின் பேரனாரும். தருமராசா(நீர்வேலி), துரைசிங்கம்(கொழும்பு), தவலிங்கம் (இந்தியா), கமலாகரன் (சுவிஸ்) இராசாம்பிகை (இந்தியா), இந்திராணி (இணுவில்) ஆகியோரின் சகோதரரும் பூமணி, ஜெயலட்சுமி (கொழும்பு), யோகராணி (இந்தியா), செல்வஜோதி[சுவிஸ்], சுவாமிநாதன் [இந்தியா], குலநாயகம் (இணுவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 17-5-2000 புதன் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி இந்துமயானத்தில் பூதவுடல்தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

திருமதி த. உமாதேவி
(மனைவி)

தற்காலிக முகவரி
இணுவில் மேற்கு,
இணுவில்.

(482)

## தம்பையா - தங்கமுத்து

பண்ணாலையைப் பிறப்பிடமாகவும், கருகம்பனையை வசிப்பிடமாகவும், தற்போது ஊரெழு மேற்கு சுன்னாகத்தில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற தம்பையாவின் அன்புமனைவி தங்கமுத்து நேற்று (25-05-2000] காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம், புஸ்பராணி, சூரசங்காரம், சற்குணதேவி, சிவநேசன் [லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை], விஷ்ணுகாந்தன், லோககாந்திமதி ஆகியோரின் அன்புத்தாயாரும், திருஞானசம்பந்தர், திலகவதி, பரமேஸ்வரன், ரஞ்சனா சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மதிவதனி, பிரேமவதனி, சதீஸ்வரன், கேதீஸ்வரன், தரண்யா, தர்மினா, அச்சுதன், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நேற்று நடைபெற்று தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

த. சிவநேசன்
[மகன்]

(சி 349]

## திருமதி சண்முகம் துரையம்மா

திருநெல்வேலி, பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் துரையம்மா நேற்று (25-5-2000) கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவகுரு சண்முகத்தின் அன்பு மனைவியும், செல்வராணி [கனடா], ஜெயலட்சுமி [ஜேர்மனி], சிவசுப்பிரமணியம் ஜேர்மனி], தவபாலன் இந்திராணி, பத்மராணி, புஸ்பராணி, விஜயராணி, ஜெயபாலன் (ஜேர்மனி] சண்முகபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி [கனடா], பழனித்துரை [ஜேர்மனி], தில்லைநாயகி (ஜேர்மனி], கௌரியம்பாள், தியாகராசா, சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி], கனகராஜா (ஓவியர், கலைவாணி கலையகம், திருநெல்வேலி), தங்கராஜா [பாதுகாப்புப் பகுதி, யாழ். பல்கலைக்கழகம், வாசுகி [ஜேர்மனி) மாலினி [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி மனோன்மணி நாகலிங்கத்தின் [கொழும்பு] அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு.

திருமதி தங்கராஜா
விஜயராணி
[மகள்]

[சி 352]

இப்பத்திரிகை "வலம்புரி" அவ கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வென்னார் தெரு, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.